அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.224/2015
தேதி.14.9.2015

## *சீனப்பட்டாசுகள் இறக்குமதிக்கு அனுமதி இல்லை மத்திய அமைச்சர் அறிவிப்புக்கு ச.ம.க. தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ வரவேற்பு.*

இந்தியாவிலேயே, குட்டி ஜப்பான் எனப்படும் தமிழ்நாட்டின் சிவகாசியில் தான் அதிக அளவில் பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. உலகப்புகழ் பெற்ற தரத்திலும், விதவிதமான வகைகளிலும் பட்டாசுகள் தயாரிப்பில் சிவகாசி முன்னிலையிலும், முன்னோடியாகவும் திகழ்கிறது.

ஆனால், விலை மலிவு போன்ற காரணங்களால் எல்லாவிதமான சீனப்பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டு இந்தியாவில் விற்கப்பட்டு வருகின்றன. அதில் பட்டாசு வகைகளும் ஒன்று. சிவகாசியில் தயாரிக்கப்படும் பட்டாசுகள் அரசு விதித்திருக்கும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஆபத்துகள் ஏற்படுத்தாத வகையில் அனுமதிக்கப்பட்ட ரசாயனப் பொருட்களைக் கலந்து தரமாகத் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் சீனப் பட்டாசுகள் மத்திய அரசால் தடைவிதிக்கப்பட்டிருக்கும் வெடிபொருட்களைக் கொண்டு, காதுகளுக்குச் சேதம் விளைவிக்கும் கூடுதலான சப்த அளவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டு, சில வணிக நோக்கம் மட்டுமே கொண்ட சுயநலக்காரர்களால் இறக்குமதி செய்யப்பட்டு கள்ளத்தனமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சமத்துவ மக்கள் கட்சி இதனைக் கருத்தில் கொண்டு, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றிவரும் சிவகாசிப் பட்டாசுத் தொழிலுக்கு பாதகம் ஏற்படாத வகையில், சீனப்பட்டாசுகள் இறக்குமதிக்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வைத்து வருகிறது.இதை முன்னிறுத்தி பல போராட்டங்களையும், கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி இருக்கிறது.

பட்டாசு நிறுவனங்கள் வெகுவாக நம்பியிருக்கும் தீபாவளிப் பண்டிகை நெருங்கி வரும் காலகட்டத்தில், எங்கள் கோரிக்கையையும், நூற்றுக்கணக்கான பட்டாசு தயாரிப்பாளர்களின் கோரிக்கையையும் ஏற்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை ராஜாங்க மந்திரி திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள், சீனப்பட்டாசுகள் இறக்குமதிக்கு அனுமதி கிடையாது என்று அறிவித்திருப்பது அனைவருக்கும் நிம்மதியையும், வயிற்றில் பால் வார்ப்பதாகவும் அமைந்துள்ளது.

மேலும், அதையும் மீறி சட்டவிரோதமாக இறக்குமதி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பும் மகிழ்ச்சி அளிப்பதாகவும் உள்ளது. அதே வேளை, இந்த அறிவுப்புக்கு முன்பாகவே இறக்குமதி செய்து கள்ளத்தனமாக விற்பனை செய்ய காத்திருக்கும் குற்றவாளிகளை முன்கூட்டியே கண்டுபிடித்து அப்பட்டாசுகளை அழிக்கவும், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.மேலும்,சீனப்பட்டாசுகளை இந்தியத் தயாரிப்பாக போலியான முறையில் காட்டி விற்கப்படுவதையும் முன்கூட்டியே கண்டறிந்து அவற்றையும் தடைசெய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். மத்திய அமைச்சரின் நல்ல அறிவிப்பை வரவேற்று சமத்துவ மக்கள் கட்சி சார்பில் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எ.ஏ,
தலைவர்.